2331
VIII D.95

ஸ்ரீ

ஸ்ரீமதாதிவராஹபரப்ரஹ்மணே நம:

வராஹபுராணத்தின் உள்ளீடான

கைசிக புராணம்

ஸ்ரீபராசரபட்டர் அருளிச்செய்த
வியாக்கியானத்துடன் கூடியது

ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதிபயங்கரம்

அண்ணங்கராசாரியரால்

சென்னை, ரத்தினம் பிரஸ் பிராஞ்சில் அச்சிடுவிக்கப்பட்டது

கிடைக்குமிடம் :

க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்.

விலை 0—6—0

மன்மதஹூ கைசிகத்வாதசி

1955

ஸ்ரீ

ஸ்ரீமதாதிவராஹபரப்ரஹ்மணே நம:

வராஹபுராணத்தின் உள்ளீடான

கைசிக புராணம்

ஸ்ரீபராசரபட்டர் அருளிச்செய்த
வியாக்கியானத்துடன் கூடியது

ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதிபயங்கரம்

அண்ணங்கராசாரியரால்

சென்னை, ரத்தினம் பிரஸ் பிராஞ்சில் அச்சிடுவிக்கப்பட்டது

கிடைக்குமிடம்:

க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்.

விலை 0—6—0

மன்மதஹு கைசிகத்வாதசி

1955

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

கைசிக புராணம்

பொதுத் தனியன்கள்

ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம்
யதீந்த்ர ப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம்.

லக்ஷ்மீநாத ஸமாரம்பாம் நாத யாமுந மத்யமாம்
அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம்.

யோநித்யமச்யுத பதாம்புஜ யுக்ம ருக்ம
வ்யாமோஹதஸ் ததிதராணி த்ருணாய மேநே
அஸ்மத்குரோர்பகவதோஸ்ய தயைகஸிந்தோ:
ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே.

மாதா பிதா யுவதயஸ் தநயா விபூதிஸ்
ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம்.
ஆத்யஸ்ய ந: குலபதேர் வகுளாபிராமம்
ஸ்ரீமத்ததங்க்ரியுகளம் ப்ரணமாமி மூர்த்நா.

பூதம் ஸரச்ச மஹதாஹ்வய பட்டநாத
ஸ்ரீபக்திஸார குலசேகர யோகிவாஹாந்
பக்தாங்க்ரிரேணு பரகால யதீந்த்ரமிச்ராந்
ஸ்ரீமத் பராங்குசமுநிம் ப்ரணதோஸ்மி நித்யம்.

விசேஷ தனியன்கள்

ஸ்ரீபராசரபட்டார்ய: ஸ்ரீரங்கேசபுரோஹித:
ஸ்ரீவத்ஸாங்கஸுத: ஸ்ரீமாந் ச்ரேயஸே மேஸ்து பூயஸே.

நமஸ்தேஸ்து வராஹாய லீலயோத்தரதே மஹீம்
குரமத்ய கதோ யஸ்ய மேரு: கணகணாயதே.
ப்ராயோதந்வது த்திர்ணம ப்ரபத்யேஹம் வஸுந்தராம்
மஹாவராஹ தம்ஷ்ட்ராக்ர மல்லீகோச மதுவ்ரதாம்.

ஸ்ரீ:

பட்டரருளிச்செய்த வியாக்கியானத்தின் அவதாரிகை

"வேதோகிலோ தர்மமூலம்" என்றும் "பித்ரு தேவ மநுஷ்யாணாம் வேதச் சக்ஷுஃ ஸநாதநம்" என்றும் சொல்லுகிறபடியே அதீந்த்ரியங்களான தத்வஹித புருஷார்த்தங்களில் ப்ரமாணபூதங்களான வேதங்களுக்கு பரிகர பூதங்களான வித்யாஸ்தாநங்கள் பத்து. இவற்றில்,

சிக்ஷையானது—வர்ணங்களினுடைய உச்சாரண விசேஷ ப்ரதிபாதந மாத்ரத்திலே தத்பரமாகையாலும்;

நிருக்தமானது—வர்ண ஸாமாந்யாதிகளைக் கொண்டு பதார்த்த விசேஷ ப்ரதிபாதநத்திலே தத்பரமாகையாலும்;

ச்சந்தோ விசிதியானது—வர்ண ஸங்க்யா விசேஷ நியத காயத்ர்யாதிச் சந்தோமாத்ர ப்ரதிபாதகமாகையாலும்;

வ்யாகரணமானது—வர்ண ஸமுதாயாத்மகங்களான பதங்களினுடைய ஸாதுத்வாஸாதுத்வமாத்ர வ்யாப்ருதமாகையாலும்;

கல்பஸூத்ரங்கள்—பதஸங்காதரூப வாக்ய விசேஷ சோதித கர்மாநுஷ்டாந விசேஷ கல்பநா ப்ரவ்ருத்தங்களாகையாலும்;

ஜ்யோதிஷமானது—யதா சாஸ்த்ராநுஷ்டேயங்களான கர்மங்களை யதாகால மநுஷ்டிக்கும்படி காலவிசேஷ ப்ரதர்சந ப்ரதானமாகையாலும்;

ந்யாய சாஸ்த்ரமானது—ப்ரமாணாதி ஷோடச பதார்த்த வ்யவஹாரமாத்ர ப்ரதிஷ்டாபக மாகை யாலும்;

மீமாம்ஸையானது-ஸோபப்ரும்ஹணங்களான வேதங்களினுடைய வசந வ்யக்தி விசேஷ நிர்த்தார ணார்த்த யுக்தி விசேஷ ப்ரதிஷ்டாபக மாகையாலும்;

உபப்ரும்ஹணங்கள் தன்னில் தர்மசாஸ்த்ரங்கள் கர்மபாகோபப்ரும்ஹண ப்ரதானங்களாகை யாலும்;

ப்ரஹ்மபாகோபப்ரும்ஹண ப்ரதாநங்களான இதிஹாஸபுராணங்களில் இதிஹாஸங்கள்—தர் மாதி புருஷார்த்த விசேஷ ஸ்வரூபத்தைமுன்னிட் டுக்கொண்டு ப்ரவர்த்திக்கையாலே தத்வப்ரதிபாத நத்தில் விளம்பித ப்ரத்யயங்க ளாகையாலும் இவைகள் தத்வஹித புருஷார்த்த ப்ரதிபாதநத்தில் அப்ரயோஜகங்களாகக் கடவன.

புராணங்கள் பரதத்வ பரமஹித பரமபுருஷார்த் தங்களில் ஸாக்ஷாதுபப்ரும்ஹணங்களாகக் கடவன. புராணங்கள் தன்னில்—

"ஸங்கீர்ணாஸ்ஸாத்விகாச்சைவ ராஜஸாஸ் தாமஸாஸ் ததா" என்று கல்ப விசேஷங்களை விபஜித்து;

யஸ்மிந் கல்பே து யத் ப்ரோக்தம் புராணம் ப்ரஹ்மணா புரா
தஸ்ய தஸ்யது மாஹாத்ம்யம் தத்ஸ்வரூபேண வர்ண்யதே.
அக்நே: சிவஸ்ய மாஹாத்ம்யம் தாமஸேஷு ப்ரகீர்த்யதே
ராஜஸேஷு ச மாஹாத்ம்யமதிகம் ப்ரஹ்மணோ விது:

ஸங்கீர்ணேஷு ஸரஸ்வத்யா: பித்ரூணாஞ்ச நிகத்யதே
ஸாத்விகேஷ்வத கல்பேஷு மாஹாத்ம்யமதிகம் ஹரே:
தேஷ்வேவ யோகஸம்ஸித்தா கமிஷ்யந்தி பராம் கதிம்.

என்று சொல்லுகிறபடியே ஸாத்விக கல்பங்களிலே ஸத்வோத்தரனான ப்ரஹ்மாவாலே ப்ரோக்தங்களாய்,

ஸத்வாத் ஸஞ்ஜாயதே ஜ்ஞானம் என்றும்
ஸத்வம் விஷ்ணு ப்ரகாசகம் என்றும்

சொல்லுகிறபடியே அஜ்ஞான, ஸம்சய, விபர்யயங்கள் தீரும்படி பாரதத்வாதி விசேஷ நிச்சாயகங்களான ஸாத்விக புராணங்களே முமுக்ஷுக்களுக்கு உபஜீவ்யங்களாகக் கடவன.

ஸாத்விக புராணங்கள் தன்னில் இதர வக்த்ருகங்களான புராணங்களிற் காட்டில் பரமஸத்வ ஸமாச்ரயனான பகவான் வக்தாவாக ப்ரவ்ருத்தமான புராணமே உத்க்ருஷ்டமாகக் கடவது.

பகவத் வாக்யங்கள் தன்னிலும்—

"கள்ளவேடத்தைக் கொண்டுபோய்ப் புறம் புக்கவாறும் கலந்தசுரரை உள்ளம்பேதம் செய்திட்டு உயிருண்ட வுபாயங்களும்" என்கிறபடியே "திண்கழல்காலசுரர்க்குத் தீங்கிழைக்குந்திருமால்" என்கிற ஸர்வேச்வரன் ஆஸுர ப்ரக்ருதிகளுடைய மோஹனார்த்தமாக அருளிச் செய்யும் வார்த்தைகள் ஸாத்விகர்களுக்கு உபஜீவ்யங்களாகா.

மற்றும் இவனுடைய அவஸ்தா விசேஷங்களில் வாக்யங்களைப் பார்த்தால்—

பரமபத நிலயன் அருளிச்செய்யும் வார்த்தை—பரன் வாக்யமாகையாலே பந்தமில்லாதார் கேட்கும் படியாயிருக்கும்.

க்ஷீராப்திநாதன் வாக்யங்களைப் பார்த்தால்—கடலோசை யோடே கலந்து அர்த்த ப்ரத்யாயக மாகாது.

மத்ஸ்யரூபியானவன் வாக்யத்தைப் பார்த்தால்-ஒருகாலும் கரையேற்றமற்றவன் வார்த்தை யாகையாலே ஜடாசய ஸம்பந்தம் தோற்றும் படியா யிருக்கும்.

கூர்மரூபியானவன் வார்த்தையைப் பார்த்தால் கம்பீரர் கலங்கவும் ஸ்திரர் ப்ரமிக்கவும், கீழ்மை விடாமலிருக்குமவன் சொல்லும் வார்த்தையாகை யாலே மேற்கொள்ளும் வார்த்தையாயிராது.

ஸ்ரீ ந்ருஸிம்ஹன் வாக்யம் — கழுத்துக்கு மேலொருபடியும் கழுத்துக்குக் கீழொருபடியுமாகை யாலே ப்ரதோஷோதிதமா யிருக்கும.

ஸ்ரீ வாமநன் வாக்யம்—அடியிற் சொன்னபடி யன்றிக்கே விஷமபதமாயிருக்கும். இவ்வளவுமன் றிக்கே கவியாயிருப்பானொருத்தனளவிலே கண் ணழிவை யுடைத்தாயிருக்கும்.

பரசுராமன் வாக்யம்—பரசுதாரணம் பண்ணி ஸர்வாவஸ்தைகளிலும் க்ஷமை விட்டவன் வார்த்தை யாகையாலே ப்ரத்யயம் பிறக்கும்படியிராது.

சக்ரவர்த்தித் திருமகன் வாக்யம்-கபிகளோடே கலந்து புண்யஜனபாதாபர்யந்தமாயிருக்கும்.

பலபத்ரன் வாக்யம்—ஸரஃஸ்ரோதஸ்ஸாலே தாழப் போவாரையும் உத்பதப்ரவ்ருத்தராக்கின வன் வார்த்தை யாகையாலே மதவிகாரம் தோற்றி யிருக்கும். அவ்வளவன்றிக்கே சுத்தவர்ணனாயிருக் கச் செய்தேயும் கலப்பையுடையவன் வார்த்தையா கையாலே விச்வஸிக்க வொண்ணாதபடியாயிருக்கும்.

ஸ்ரீக்ருஷ்ணன் வாக்யம்—பிறந்தவன்று தொடங்கிக் கைவந்த களவிலே காணலாம்படியா யிருக்கும்.

கல்க்யவதாரத்தின் வாக்யம்—வரப்போகிற தென்றிருக்குமதுபோக்கி ஒருவருக்கும் கை வந்திருக் கும் வார்த்தையன்று. அவ்வளவன்றிக்கே அனு மானித் தறியவேண்டியதா யிருக்கும். இப்படிக் கொரு அந்யதாசங்கை பண்ணவொண்ணாதபடி,

"ஏனத்தினுருவாகி நிலமங்கையெழில் கொண்ட ஞானத்தினொளியுரு" என்றும்

"ஏனத்துருவாயிடந்த ஞானப்பிரான்" என்றும் சொல்லுகிறபடியே ஸம்யக்ஜ்ஞானோபகாரகனாகை யாலும், "பன்றியாயன்று பாரகங்கீண்ட பாழியானா ழியானருளே நன்று நானுய்ய" என்று ஜ்ஞான வான்கள் விச்வஸித்துக் கைக்கொள்ளும்படியான க்ருபாதிசயத்தை யுடையவனாகையாலும், 'ஆதி முனேனமாகி அரணாய மூர்த்தியது நம்மையாளு மரசே" என்று சொல்லுகிறபடியே ரக்ஷகத்வ பூர்த் தியையுடையவனாகையாலும், "இருங்கற்பகஞ்சேர் வானத்தவர்க்குமல்லாதவர்க்கும் மற்றெல்லாயவர்க் கும் ஏனத்துருவாயிடந்த ஞானப்பிரானையல்லா

லில்லை நான்கண்ட நல்லது" என்று ஆழ்வாரும் ப்ரதம ப்ரபந்தத்திலே ஸர்வர்க்கு மிவனையொழிய ரக்ஷகாந்தரமில்லையென்று அறுதியிட்டு, சரம ப்ரபந்தத்தின் முடிவிலும்,

"நீலவரையிரண்டுபிறைகவ்வி நிமிர்ந்த தொப்பக்
கோல வராகமொன்றாய் நிலங்கோட்டிடைக்
கொண்ட வெந்தாய் நீலக்கடல் கடைந்தாயுன்னைப்
பெற்றினிப் போக்குவனோ"

என்று அவதாரங்களெல்லாம் கிடக்கச் செய்தே இந்த அவதாரத்தில் தாம் அந்தமில்பேரின்பம் பெற்றபடியை அருளிச் செய்கையாலும், அவனுடைய ரக்ஷகத்வமானது உத்தாரகமான ரக்ஷகத்வமாகையாலும், இப்படியிவன் பண்ணுகிற ரக்ஷணம் வாத்ஸல்ய மூலமென்று தோற்றும்படி

"ஏனமாய் நிலங்கீண்ட என்னப்பனே" என்றும்
"அப்பனான்றியிடந் தெயிற்றில் கொண்டநாள்"
என்றும்

வாத்ஸல்யா விநாபூதமான பித்ருத்வ மிவனுக்குண்டென்று சொல்லுகையாலும் வராஹாவதாரமே ஸர்வோத்க்ருஷ்டமாகக் கடவது.

ஸகல லோக பிதாவான இவனை ஸகல லோக மாதாவான பூமிப்பிராட்டி பிரஜைகளுக்கு ஹிதமேதென்று ப்ரச்நம் பண்ண ப்ரவ்ருத்தமான புராணமாகையாலே, இப்புராணம் எல்லாப் புராணங்களிலும் உத்க்ருஷ்டமாகக் கடவது.

இது ஸர்வேச்வரன் நாச்சியாரைப் பார்த்தருளிச் செய்யும் வார்த்தையாகையாலே,

"பாம்பணையார்க்கும் தம்பாம்புபோல் நாவு
மிரண்டுளவாய்த்து"

என்கிறபடியே இதுவு முபாலம்ப விஷயமாகிலோவென்னில்; அவ்வார்த்தையும்—

"செம்மையுடைய திருவரங்கர் தாம்பணித்த
மெய்ம்மைப் பெருவார்த்தை விட்டுசித்தர்
கேட்டிருப்பர்"

என்றறிந்திருக்கச் செய்தேயும், விச்லேஷக்லேசம் பொறுக்கமாட்டாதபடியான த்வராதிசயத்தாலே "பாம்பணையார்க்கும் தம் பாம்பு போல் நாவுமிரண்டுளவாய்த்து" என்று அநந்தபுஜக ஸம்ஸர்க்க தோஷத்தாலே பொய்யாகிறதோ வென்று அதிசங்கை பண்ணினளித்தனை.

இவ்வார்த்தை அப்படியன்றிக்கே, "பார்வண்ண மடமங்கை பத்தர்"—என்கிறபடியே நாச்சியார் பக்கலுண்டான பாவபந்தத்தாலே ப்ரளயார்ணவ மக்னையான இவளை அதில் நின்று மேலெடுத்து, இவளுடைய க்லேசத்தைத் தவிர்த்துவைத்த வளவிலும், ஸம்ஸாரார்ணவ மக்நரான தன் ப்ரஜைகளினுடைய துஃக நிவ்ருத்திக்கொரு ஸுகரோபாயம் காணுமை யாலே விஷண்ணையாயிருக்கிற இவளைக் கண்டருளின பகவான் இவள் தேறும்படியாகச் சொன்ன வார்த்தை யாகையாலே அதிசங்கை பண்ணவேண்டிய தில்லை.

ஆகையாலே, அவஸ்தாந்தரங்களிற் போலன்றிக்கே, வராஹாவஸ்தையில் தமக்கருளிச் செய்யும் வார்த்தை தப்பாரென்னுமர்த்தத்தை—

*பாசி தூர்த்துக் கிடந்த பார்மகட்குப் பண்டொருநாள்
மாசுடம்பில் நீர்வாரா மானமிலாப் பன்றியாம்
தேசுடைய தேவர் திருவரங்கச் செல்வனார்
பேசியிருப்பனகள் பேர்க்கவும் பேராவே.*

என்று நாச்சியார் தாமே அருளிச் செய்தார்.

ஆகையால் இந்தப் புராணம் எல்லாப் புராணங்களிலும் உத்க்ருஷ்டமாகத் தட்டில்லை. எங்ஙனே யென்னில்—

இப்புராணந்தன்னில் பகவானருளிச் செய்த உபாயங்களெல்லாத்திலும் கானரூபமான உபாயமே அத்யந்தோத்க்ருஷ்டமாகக் காணக்கடவது. இவர் பல உபாயங்களு 'மருளிச்செய்யக் கேட்டருளின நாச்சியார் உபாயங்களெல்லாம் கிடக்கச் செய்தே இக்கான ரூபமான உபாயத்தைத் தாம்பற்றி—

பாற்கடலுட்பையத்துயின்ற பரமனடி பாடி என்றும்
ஓங்கியுலகளந்த வுத்தமன்பேர் பாடி— என்றும்
தூமலர் தூவித்தொழுது வாயினல் பாடி— என்றும்
நாராயணன் மூர்த்தி கேசவனைப் பாடவும் என்றும்
பாவாயெழுந்திராய் பாடிப்பறைகொண்டு— என்றும்
முற்றம் புகுந்து முகில்வண்ணன்பேர் பாட என்றும்
மனத்துக்கினியானைப் பாடவும்— என்றும்
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடி — என்றும்
பங்கயக் கண்ணானைப் பாட— என்றும்

மாற்றாரை மாற்றழிக்க வல்லானைப் பாட— என்றும்
தூயோமாய் வந்தோம் துயிலெழப் பாட— என்றும்
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி என்றும்
கோவிந்தா உன் தன்னைப் பாடிப் பறைகொண்டு - என்றும்

இவரருளிச் செய்யக் கேட்ட உபாயங்களெல்லாத்திலும் இவள் திருவுள்ளத்துக்கேறத் தான் பாடின பாட்டிலே அனுஷ்டித்துக் காட்டின உபாயம் இதுவேயாயிருக்கும். ஆகையாலே, பல ப்ரதேசங்களிலும் தாம் பாடின பாட்டை அருளிச்செய்து, பாடவல்ல நாச்சியார் என்னும் பேர்பெற்றபடியாலும் இக்கீதரூபமான உபாயமே முக்யமாகக் கடவதென்று நாச்சியாரைப் பார்த்தருளிச் செய்தருளினார்.

— கைசிக புராணப்ராரம்பம் —

ஸ்ரீவராஹ உவாச—

जागरे तु विशालाक्षि जानतो वाऽप्यजानतः ।
यो मे प्रगायते गेयं मम भक्त्या व्यवस्थितः ॥ १ ॥

ஜாகரே து விசாலாக்ஷி ஜாநதோ வாப்யஜாநத:
யோ மே ப்ரகாயதே கேயம் மம பக்த்யா வ்யவஸ்தித: 1

இந்த ச்லோகத்தில் தமக்குப் பாடுவான் பாடும் படியை அருளிச்செய்கிறார்—

பாடவல்லாரொருத்தன் ஜாகர வ்ரத நிஷ்டனாய் *ப்ராஹ்மே முஹூர்த்தே சோத்தாய* என்கிற படியே ப்ராஹ்மமான முஹூர்த்தத்திலே வந்து, நாம் முகம் கொடுத்துக் கேட்கிலுமாம், நாம் ஜகத்ரக்ஷண சிந்தையிலே அந்யபரராயிருக்கிலுமாம்; நம்முடைய

குணபதாநங்களை உள்ளீடாக வைத்துப் புணர்க்கப் பட்ட காதைகளை ஒரு பலத்தையும் நினையாமல் நம் முடைய பக்கல் பக்த்யதிசயத்தோடே நமக்கே பாடக் கடவன்—என்று நாச்சியாரைப் பார்த்தருளிச் செய் கிறார்.

यावन्ति त्वक्षराण्यस्य गीयमाने यशस्विनि ।
तावद्वर्षसहस्राणि स्वर्गलोके महीयते ॥ २ ॥

யாவந்தி த்வக்ஷராண்யஸ்ய கீயமாநே யசஸ்விநி
தாவத்வர்ஷ ஸஹஸ்ராணி ஸ்வர்கலோகே மஹீயதே 2

இப்படி உம்முடைய புகழையும் நம்முடைய புகழையும் உள்ளீடாக வைத்துப் புணர்க்கப்பட்ட காதைகளை நமக்குப் பாடினால், அந்த காதைகளுக் குண்டான அக்ஷரங்களுக்கு, இசையாலே மேலேற்ற மாக ஒரோரக்ஷரங்களுக்கும் ஆயிரமாயிரம் ஸம்வத் ஸரம் ஸ்வர்கலோகத்திலே யிருக்கும் காணும் நம்பாடு வான்—என்றருளிச் செய்கிறார்.

रूपवान् गुणवान् शुद्धः सर्वधर्मभृतां वरः ।
नित्यं पश्यति वै शक्रं वज्रहस्तं न संशयः ॥ ३ ॥

ரூபவாந் குணவாந் சுத்த : ஸர்வதர்மப்ருதாம் வர:
நித்யம் பச்யதி வை சக்ரம் வஜ்ரஹஸ்தம் ந ஸம்சய: 3

அவன் ஸ்வர்கலோகத்தி லிருக்குமளவும் அங் குள்ளாரெல்லாரிலும் வடிவழகியனுமாய், குணவானு மாய், ஸ்வர்க லோகத்திலே ஸக்தனுமன்றிக்கே, ஸர்வதர்மங்களையு மறிந்து, அங்கும் நம்மை மறவாம லிருக்கிற இவன், அத்தேசத்துக் கதிபதியான

இந்த்ரன் தன் ஆயுதத்துடனே வந்து ஸேவித்து நிற்க, அபாங்க வீக்ஷணம் பண்ணி யிருக்கும் காணும் நம் பாடுவான்—என்றருளிச் செய்கிறார்.

मद्भक्तश्चापि जायेत इन्द्रेणैकपदे स्थितः ।
सर्वधर्मगुणश्रेष्ठस्तत्रापि मम लुब्धकः ॥ ४ ॥

மத்பக்தச்சாபி ஜாயேத இந்த்ரேணைகபதே ஸ்திதः
ஸர்வதர்மகுணச்ரேஷ்டஸ் தத்ராபி மம லுப்தகः 4

இப்படி இந்த்ரன் ஸேவித்துக் கொண்டிருக்கச் செய்தேயும், இந்த்ரனைப்போலே அங்கு நம்மை மறந்திருக்கையின்றிக்கே, நமக் காராதனங்களான கர்மங்களைச் செய்து நம்மையே அநுஸந்தித்துக் கொண்டிருப்பன் நம்பாடுவானென்றருளிச் செய்கிறார்.

इन्द्रलोकात् परिभ्रष्टो मम गेयपरायणः ।
प्रमुक्तः सर्वसंसारैर्मम लोकं च गच्छति ॥ ५ ॥

இந்த்ரலோகாத் பரிப்ரஷ்டோ மம கேயபராயண:
ப்ரமுக்தः ஸர்வஸம்ஸாரைர் மம லோகஞ்ச கச்சதி 5

இந்த்ரலோகத்திலிருக்குமளவும் அங்குள்ளாரெல்லாரையு மழைத்துப் பாட்டுக் கேட்பிக்குமளவன்றிக்கே, நம்மை நினைத்துப் பாடிப் போருகையாலே, அங்குநின்றும் இவனைக் கொண்டுபோய் நம் பெரிய வீட்டிலே *ஏதத் ஸாம காயந்நாஸ்தே* என்று எப்போதும் நமக்கே பாடியிருக்கும்படி வைத்தோம் காணும்—என்றருளிச் செய்கிறார்.

एवं तु वचनं श्रुत्वा तत्प्रसादाद्वसुन्धरा ।
वराहरूपिणं देवं प्रत्युवाच शुभानना ॥ ६ ॥

ஏவந்து வசநம் ச்ருத்வா தத்ப்ரஸாதாத் வஸுந்தரா
வராஹரூபிணம் தேவம் ப்ரத்யுவாச சுபாநநா 6

இப்படி வராஹநாயனார் அருளிச் செய்யக் கேட்டு, திருவுள்ளத்திலுகப்பெல்லாம் திருமுகத்திலே தோற்றும்படி அலர்ந்த திருமுகத்தையுடையளாய்க் கொண்டு ஸ்ரீவராஹநாயனாரைப் பார்த்து பூமிப்பிராட்டி ஒரு வார்த்தை விண்ணப்பம் செய்கிறாள்.

अहो! गीतप्रभावो वै यस्त्वया परिकीर्तितः ।
कच्च गीतप्रभावेन सिद्धिं प्राप्तो महातपाः ॥ ७ ॥

அஹோ கீதப்ரபாவோ வையஸ் த்வயா பரிகீர்த்திதः
கச்ச கீதப்ரபாவேந ஸித்திம் ப்ராப்தோ மஹாதபா:? 7

வேதங்களாதல், ருஷிகளாதல் சொல்லுகையன்றிக்கே தேவரீர் தாமே அருளிச் செய்யும்படியாயிருந்தது! இப்படிக்கொத்த கீதப்ரபாவத்தாலே தேவரீர் திருவடிகளைப் பெற்றவன் யாவனொருவன், அவனை யருளிச்செய்யவேணும்—என்று விண்ணப்பம் செய்தாள்.

ஸ்ரீவராஹ உவாச—

இப்படி விண்ணப்பம் செய்த பூமிப்பிராட்டியைப்பார்த்து வராஹ நாயனருளிச் செய்கிறார்.

शृणु तत्त्वेन ते देवि कथ्यमानं यशस्विनम् ।
यस्तु गीतप्रभावेन सिद्धिं प्राप्तो महातपाः ॥ ८ ॥

ச்ருணு தத்வேந தே தேவி! கத்யமாநம் யசஸ்விநம்
யஸ்து கீதப்ரபாவேந ஸித்திம் ப்ராப்தோ மஹாதபா: 8

பாம்பணையார்க்கும் தம் பாம்புபோல் நாவுமிரண்டுளவாய்த்து என்று நீர் நம்மைச் சொல்லும்படி உம்மோடு நாம் ரஸித்துச் சொல்லுகிற வார்த்தையாக நினையாதே இது ஸத்யமான வார்த்தையாயிருக்கும். யாவனொருவன் நம்மைப் பாடி நம் பெரிய வீடு பெற்றான் அவனைச் சொல்லுகிறோம் காணும்; கேளீர்—என்றருளிச் செய்கிறார்.

अस्ति दक्षिणदिग्भागे महेन्द्रो नाम पर्वतः ।
तत्र क्षीरनदी पुण्या दक्षिणे सागरङ्गमा ॥ ९ ॥

அஸ்தி தக்ஷிணதிக்பாகே மஹேந்த்ரோ நாம பர்வத:
தத்ர க்ஷீரநதீ புண்யா தக்ஷிணே ஸாகரம்கமா 9

வாரீர் பிராட்டியே! தக்ஷிணதிக்கிலே மஹேந்திரமென்றொரு பர்வதம் ப்ரஸித்தமாயிரா நின்றது. அவ்விடத்தில் க்ஷீரநதி யென்றொரு நதியானது தக்ஷிண ஸமுத்ரகாமிநியா யிராநின்றது.

तत्र सिद्धाश्रमे भद्रे चंडालः कृतनिश्चयः ।
दूराज्जागरणे गाति मम भक्त्या व्यवस्थितः ॥ १० ॥

தத்ர ஸித்தாச்ரமே பத்ரே சண்டால: க்ருதநிச்சய:
தூராஜ் ஜாகரணே காதி மம பக்த்யா வ்யவஸ்தித: 10

முன்பு நீரும் நாமும் குறுங்குடியாகக் கட்டி யிருந்த ஆச்ரமத்திலே பாபயோனியிலே பிறந்தா னொருவன் நமக்குப் பாடவேணுமென்று ஸங்கல் பித்து ஜாகரவ்ரத நிஷ்டனாய், மேலும் நம்பக்கல் பக்தியோடே ப்ராஹ்ம முஹூர்த்தத்திலே வந்து தன் ஜாத்யநுகுணமாக தூரத்திலே வந்து நின்று பாடினான் காணும் என்றருளிச் செய்தார்.

एवं तु गायमानस्य गताः संवत्सरा दश ।
श्वपाकस्य गुणज्ञस्य मद्भक्तस्य वसुन्धरे ॥ ११ ॥

ஏவந்து காயமாநஸ்ய கதா: ஸம்வத்ஸரா தச
ச்வபாகஸ்ய குணஜ்ஞஸ்ய மத்பக்தஸ்ய வஸுந்தரே 11

இப்படி அந்த்யஜாதியிலே பிறந்திருக்கச் செய் தேயும், நம் குணாநுஸந்தானத்தைப் பண்ணி, நமக்கு பக்தனாய் வந்து, இப்படி பத்து ஸம்வத்ஸரம் பாடி னான் காணும் — என்றருளிச் செய்கிறார்.

कौमुदस्य तु मासस्य द्वादश्यां शुक्लपक्षके ।
सुप्ते जने गते यामे वीणामादाय निर्ययौ ॥ १२ ॥

கௌமுதஸ்ய து மாஸஸ்ய த்வாதச்யாம் சுக்லபக்ஷகே
ஸுப்தே ஜநே கதே யாமே வீணாமாதாய நிர்யயௌ 12

பின்பொரு கார்த்திகை மாஸத்தில் சுக்லபக்ஷ த்வாதசியின் ராத்திரி ஒரு யாமத்துக்கு மேல் எல்லாரு முறங்கினவளவிலே, தான் ஜாகர வ்ரத நிஷ்டனா கையாலே உணர்ந்திருந்து, நாமிருக்கிற விடத்திலே வந்து, நமக்குப் பாடுவதாகக் கையும் வீணையுமாய்க் கொண்டு தன் வீட்டில் நின்றும் புறப்பட்டான் காணும்—என்றருளிச் செய்தார்.

ततो वर्त्मनि चण्डालो गृहीतो ब्रह्मरक्षसा ।
अल्पप्राणः श्वपाको वै बलवान् ब्रह्मराक्षसः ॥ १३ ॥

ததோ வர்த்மநி சண்டாலோ க்ருஹீதோ ப்ரஹ்மரக்ஷஸா
அல்பப்ராண: ச்வபாகோ வை பலவாந் ப்ரஹ்மராக்ஷஸ: 13

அநந்தரம் நடுவழியிலே வந்த வளவிலே, ஒரு ப்ரஹ்மரக்ஷஸ்ஸின் கையி லகப்பட்டான். அந்த ப்ரஹ்மரக்ஷஸ்ஸு ஊன்மல்கிமோடு பருத்தவனை கையாலே பலவானயிருந்தான். நம்பாடுவான் நினைந்து நைந்து உள்கரைந்துருகுகிறவனைகை யாலே, துர்பலனு யிருந்தான் காணும்—என் றருளிச்செய்தார்.

दुःखेन स तु सन्तप्तो न च शक्तो विचेष्टितुम् ।
उवाच वचनं मन्दं मातङ्गो ब्रह्मराक्षसम् ॥ १४ ॥

து:கேந ஸது ஸந்தப்தோ நச சக்தோ விசேஷ்டிதும்
உவாச வசநம் மந்தம் மாதங்கோ ப்ரஹ்மராக்ஷஸம் 14

நம்பாடுவான் பலவானல்லாமையாலே, பராக்ர மித்து விடுவித்துக் கொண்டுபோக ஸமர்த்தனுக வில்லை. ப்ராஹ்மண ஜாதியுமல்லாமையாலே, ஒரு பஞ்சாதியைச் சொல்லி விடுவித்துக் கொள்ளவும் ஸமர்த்தனுகவில்லை. நம்முடைய பக்கல் பரந்யாஸமே பண்ணி ப்ரஹ்ம ரக்ஷஸ்ஸைப் பார்த்து மதுரமாக ஒரு வார்த்தை சொன்னுன் காணும்—என்றருளிச் செய்தார்.

गच्छामि संतोषयितुमहं जागरणे हरिम् ।
गानेन पुण्डरीकाक्षं ब्रह्मराक्षस मुंच माम् ॥ १५ ॥

கச்சாமி ஸந்தோஷயிது மஹம் ஜாகரணே ஹரிம்
கானேந புண்டரீகாக்ஷம் ப்ரஹ்மராக்ஷஸ முஞ்ச மாம் 15

“சிற்றஞ் சிறுகாலை வந்துன்னைச் சேவித்து” —என்கிறபடியே ஸர்வேச்வரனைப் பாடிப் பறை கொள்ளப் போகிறவனாயிருக்கிற என்னை விடாயென்றான் காணும்—என்று அருளிச்செய்கிறார்:

एवमुक्तः श्वपाकेन बलवान् ब्रह्मराक्षसः ।
अमर्षवशमापन्नो न च किंचित्तमब्रवीत् ॥ १६ ॥

ஏவமுக்த: ச்வபாகேந பலவாந் ப்ரஹ்மராக்ஷஸ:
அமர்ஷவசமாபந்நோ நச கிஞ்சித் தமப்ரவீத் 16

இப்படி நம்பாடுவான் சொன்ன வார்த்தையைக் கேட்டு ப்ரஹ்ம ரக்ஷஸ்ஸும் அதி க்ரூரமாய், வார்த்தையும் சொல்லாதே, உதாஸித்திருந்தது காண்—என்கிறார்.

आत्मानं प्रतिधावन्तं चंडालः प्राह राक्षसम् ।
किं त्वया चेष्टितव्यं मे य एवं परिधावसि ॥ १७ ॥

ஆத்மாநம் ப்ரதி தாவந்தம் சண்டாலோ ப்ரஹ்மராக்ஷஸம்
கிம் த்வயா சேஷ்டிதவ்யம் மே ய ஏவம் பரிதாவஸி 17

இப்படி கோபாக்ராந்தனாய் மேல் விழுந்து வருகிற ப்ரஹ்மரக்ஷஸ்ஸைப் பார்த்து மீளவும் நம்பாடுவானொரு வார்த்தை சொன்னான். நீ இப்படி

என்பேரில் ஓடி வந்து செய்யப் போகிறதென்ன காணுமென்றான்—என்கிறார்.

श्वपाकवचनं श्रुत्वा ततो वै ब्रह्मराक्षसः ।
उवाच वचनं घोरं मानुषाहारलोलुपः ॥ १८ ॥

ச்வபாகவசநம் ச்ருத்வா ததோ வை ப்ரஹ்மராக்ஷஸ:
உவாச வசநம் கோரம் மாநுஷாஹாரலோலுப: 18

அந்த ப்ரஹ்மரக்ஷஸ்ஸு—நம்பாடுவான் சொன்ன வார்த்தையைக் கேட்டு, தன் பசியாலே மாநுஷமாம்ஸத்தில் ஆசையுடைத்தானதாய்க் கொண்டு, இவனைப் பார்த்தொரு க்ரூரமான வார்த்தை சொல்லிற்று காணும் என்கிறார்.

अद्य मे दशरात्रं वै निराहारस्य गच्छतः ।
धात्रा त्वं विहितो मह्यमाहारः परितो मम ॥ १९ ॥

அத்ய மே தசராத்ரம் வை நிராஹாரஸ்ய கச்சத:
தாத்ரா த்வம் விஹிதோ மஹ்யமாஹார: பரிதோ மம 19

"நிகரிலவன்புகழ் பாடியிளைப்பிலம்" என்று நீ பத்து ஸம்வத்ஸரம் பாடி இளைப்பற்றுத் திரிகிறாய்; நான் பத்து நாளுண்டு காண் பட்டினியே இளைத்துத் திரிகிறேன். ஆகையாலே, நமக்கு தைவம் ஆஹாரமாய்க் கல்பித்துவைத்த உன்னை விடுவேனோ என்று சொல்லிற்று காணும் என்கிறார்.

अद्य त्वां भक्षयिष्यामि सवसामांसशोणितम् ।
तर्पयित्वा यथान्यायं यास्यामि च यथेप्सितम् ॥ २० ॥

அத்ய த்வாம் பக்ஷயிஷ்யாமி ஸவஸாமாம்ஸசோணிதம்
தர்ப்பயித்வா யதாந்யாயம் யாஸ்யாமி ச யதேப்ஸிதம் 20

இப்போது நானுன்னை விடுவதில்லை. உன் அவயவங்களைத் தனித் தனியே பிரித்து, உன் சரீரத்தின் ருதிர மாம்ஸாதிகளைக் கொண்டு தேவதாராதநம் பண்ணி, என்பசியும் தீர்த்துக் கொண்டு எனக்கிஷ்டமானபடி போவேன் என்று சொல்லிற்று காணும்—என்கிறார்.

ब्रह्मरक्षोवचः श्रुत्वा श्वपाको गीतलालसः :
राक्षसं छन्दयामास मम भक्त्या व्यवस्थितः ॥ २१ ॥

ப்ரஹ்மரக்ஷோ வச: ச்ருத்வா ச்வபாகோ கீதலாலஸ:
ராக்ஷஸம் சந்தயாமாஸ மம பக்த்யா வ்யவஸ்தித: 21

இப்படி ப்ரஹ்மரக்ஷஸ்ஸு சொன்ன வார்த்தையைக் கேட்டு, நம் பாடுவான் சரீரஹானி பர்யந்தமான ஆபத்து வந்தவளவிலும் நம்பக்கல் பக்த்யதிசயத்தாலே வ்யவஸ்திதனாய், நமக்குப் பாடவேணுமென்கிற ஆசையாலே அந்த ரக்ஷஸ்ஸை அனுவர்த்தித்து நன்மையான ஒரு வார்த்தை சொன்னான் காணும்—என்று அருளிச்செய்தார்.

शृणु तत्त्वं महाभाग भक्ष्योऽहं समुपागतः ।
अवश्यमेतत् कर्तव्यं धात्रा दत्तं यथा तव ॥ २२ ॥

ச்ருணு தத்வம் மஹாபாக பக்ஷ்யோஹம் ஸமுபாகத:
அவச்யமேதந் கர்த்தவ்யம் தாத்ரா தத்தம் யதா தவ 22

வாராய் மஹாபாகனே! யதார்த்தம் சொல்லுகிறேன். நீ கேள். நீ சொன்னபடியே உனக்கு

நான் பக்ஷ்யமாகக் கடவேன். ப்ரஹ்மா கல்பித்த படி செய்யவேண்டியது எனக்கும் அவச்யம்தான் என்று சொன்னான் காணும் நம்பாடுவான்—என்று அருளிச் செய்தார்.

पश्चात्त्वादसि मां रक्षो जागरे विनिवर्तिते ।
विष्णोः संतोषणार्थाय ममैतद्व्रतमुत्तमम् ॥ २३ ॥

பச்சாத் காதஸி மாம் ரக்ஷோ ஜாகரே விநிவர்த்திதே
விஷ்ணோ: ஸந்தோஷணார்த்தாய மமைதத் வ்ரதமுத்தமம் 23

வாராய் ரக்ஷஸ்ஸே! எனக்கொரு நியம முண்டு. ஸர்வேச்வரனுடைய ப்ரீத்யர்த்தமாக ஜாகர வ்ரதமென்றொரு வ்ரதமுண்டு. அது முடித்து நான் மீளவும் வருகிறேன். என்னை உனக்குப் பக்ஷ்ய மாகக் கொள்ளக் கடவாய் என்று சொன்னான் காணும் நம்பாடுவான்—என்கிறார்.

रक्ष मां व्रतभंगाद्वै देवं नारायणं प्रति ।
जागरे विनिवृत्ते तु मां भक्षय यथेप्सितम् ॥ २४ ॥

ரக்ஷ மாம் வ்ரதபங்காத் வை தேவம் நாராயணம் ப்ரதி
ஜாகரே விநிவ்ருத்தே து மாம் பக்ஷய யதேப்ஸிதம் 24

பகவானைப் பற்றி நானேறிட்டுக் கொண்ட வ்ரதத்துக்கு பங்கம் வாராமல் நீ என்னை ரக்ஷிக்க வேணும். இந்த ஜாகர வ்ரதம் ஸமாப்த மானவாறே உன் மனஸ்ஸுக்கு சரிப்போனபடி என்னை பக்ஷ்ய மாகக் கொள்ளக்கடவாய் என்று சொன்னான் காணும் நம்பாடுவான்—என்கிறார்.

श्वपाकस्य वचः श्रुत्वा ब्रह्मरक्षः क्षुधाऽर्दितम् ।
उवाच मधुरं वाक्यं श्वपाकं तदनन्तरम् ॥ २५ ॥

ச்வபாகஸ்ய வச:ச்ருத்வா ப்ரஹ்மரக்ஷ: க்ஷுதார்திதம்
உவாச மதுரம் வாக்யம் ச்வபாகம் ததநந்தரம் 25

இப்படி நம்பாடுவான் சொன்ன வார்த்தையைக் கேட்டு, பசியாலே இளைத்திருக்கிற ப்ரஹ்மரக்ஷஸ்ஸானது இனிதாக ஒரு வார்த்தை சொல்லிற்று காணும்—என்கிறார்.

मोघं भाषसि चण्डाल पुनरेष्याम्यहं त्विति ।
को हि रक्षोमुखाद्भ्रष्टस्तन्मुखायाभिवर्तते ॥ २६ ॥

மோகம் பாஷஸி சண்டால புநரேஷ்யாம்யஹம் த்விதி
கோ ஹி ரக்ஷோமுகாத் ப்ரஷ்டஸ் தந்முகாயாபிவர்த்ததே 26

வாராய் சண்டாளா! உன் ஜன்மத்துக் கீடாக இருந்தது நீ சொன்ன வார்த்தை. போய் மீண்டு வருகிறேனென்று நேராய் அஸத்யமே சொன்னாய். எவனாகிலும் ப்ரம்மரக்ஷஸ்ஸின் கையி லகப்பட்டு தப்பித்துக்கொண்டுபோய், மீண்டுவந்து அதன் கையிலகப்படுவனோ என்று சொல்லிற்றென்கிறார்.

बहवः सन्ति पन्थानो देशाश्च बहवस्तथा ।
आत्मदेशं परित्यज्य परेषां गन्तुमिच्छसि ॥ २७ ॥

பஹவ: ஸந்தி பந்தாநோ தேசாச்ச பஹவஸ் ததா
ஆத்மதேசம் பரித்யஜ்ய பரேஷாம் கந்து மிச்சஸி 27

இவ்வழியொழிய பலவழிகளுண்டு. இத்தேச மொழிய பல தேசங்களுமுண்டு. உன்னுடைய

தேசத்தைவிட்டு தேசாந்தரம் போவதாக நினைக்கிரு யென்று சொல்லிற்று—என்கிருர்.

स्वशरीरविनाशाय न चागच्छति कश्चन ।
रक्षसो मुखविभ्रष्टः पुनरागन्तुमिच्छसि ? ॥ २८ ॥

ஸ்வசரீரவிநாசாய ந சாகச்சதி கச்சந
ரக்ஷஸோ முகவிப்ரஷ்ட: புநராகந்து மிச்சஸி ? 28

தனக்கு சரீரநாசம் பிறக்குமிடமறிந்திருக்கச் செய்தே, அந்த இடத்தைக் குறித்து யாரேனுமொருவர் வருவாருமுண்டோ! ரக்ஷஸ்ஸின் கையிலகப்பட்டுத் தப்பிப் போய் மீண்டு வருகிறேனென்று நேராக அஸத்யமே சொன்னாய்.

राक्षसस्य वचः श्रुत्वा चंडालो धर्मसंश्रितम् ।
उवाच मधुरं वाक्यं राक्षसं पिशिताशनम् ॥ २९ ॥

ராக்ஷஸஸ்ய வச: ச்ருத்வா சண்டாலோ தர்மஸம்ச்ரிதம்
உவாச மதுரம் வாக்யம் ராக்ஷஸம் பிசிதாசநம் 29

இப்படி இந்த ரக்ஷஸ்ஸு சொன்ன வார்த்தையைக் கேட்டு நம்பாடுவானும் இந்த ரக்ஷஸ்ஸைப் பார்த்து தர்ம ஸம்யுக்தமாகவும் இனிதாகவும் ஒரு வார்த்தை சொன்னான் காணும்—என்கிருர்

यद्यप्यहं हि चंडालः पूर्वकर्मविदूषितः ।
प्राप्तोऽहं मानुषं भावं विदितेनान्तरात्मना ॥ ३० ॥

யத்யப்யஹம் ஹி சண்டால: பூர்வகர்மவிதூஷித:
ப்ராப்தோஹம் மாநுஷம் பாவம் விதிதேநாந்தராத்மநா 30

பூர்வ கர்ம தோஷத்தாலே இந்த சண்டால ஜன்மத்திலே பிறந்தேனாகிலும், பரமாத்மஜ்ஞான முண்டான படியினாலே ஒரு மனுஷ்யனுக் குண்டான ஜ்ஞானம் எனக்குமுண்டு காண். ஆகையால், என்னுடைய வார்த்தையைக் கேளாய் என்று சொல்லுகிறான் காணும்—என்கிறார்.

शृणु तत्समयं रक्षो येनागच्छाम्यहं पुनः ।
दूराज्जागरणं कृत्वा लोकनाथस्य तृप्तये ॥ ३१ ॥

ச்ருணு தத்ஸமயம் ரக்ஷோ யேநாகச்சாம்யஹம் புந:
தூராஜ்ஜாகரணம் க்ருத்வா லோகநாதஸ்ய த்ருப்தயே 31

த்ரைலோக்ய நாதனை ஸர்வேச்வரனைத் திருப்பள்ளி யுணர்த்தி ஸமாப்தவ்ரதனாய்த் திரும்பவும் யாதொருபடி நான் மீள வருவேனே, அதுக் கீடான ப்ரதிஜ்ஞைகளைப் பண்ணிக் கொடுக்கிறேன். அவற்றை நீ கேளாய் என்று சொன்னான் காணும் நம்பாடுவான்—என்கிறார்.

सत्यमूलं जगत् सर्वं लोकः सत्ये प्रतिष्ठितः ।
नाहं मिथ्या प्रवक्ष्यामि सत्यमेव वदाम्यहम् ॥ ३२ ॥

ஸத்யமூலம் ஜகத் ஸர்வம் லோக: ஸத்யே ப்ரதிஷ்டித:
நாஹம் மித்யா ப்ரவக்ஷ்யாமி ஸத்யமேவ வதாம்யஹம் 32

லோகமுண்டானதும் ஸத்யத்தாலே, லோகம் ப்ரதிஷ்டிதமாய் நின்றதும் ஸத்யத்தாலே. ஆகையால் நான் ஸத்யமே சொல்லுமித்தனை போக்கி, அஸத்ய மொருக்காலும் சொல்லேனென்றான் காணும் — என்கிறார்.

अद्य मे समयस्तत्र ब्रह्मराक्षस तं शृणु ।
शपामि सत्येन गतो यद्यहं नागमे पुनः ॥ ३३ ॥

அத்யமே ஸமயஸ்தத்ர ப்ரஹ்மராக்ஷஸ தம் ச்ருணு
சபாமி ஸத்யேந கதோ யத்யஹம் நாகமே புந: 33

வாராய், ப்ரம்மராக்ஷஸனே! என்னுடைய ப்ரதிஜ்ஞையைக் கேளாய். யாவனொருவன் ஸர்வ காரணமான ஸத்யத்தைத் தப்புகிறானோ அவன் பாபத்தை அடையக் கடவேன் மீளவும் வந்திலேனாகில்—என்கிறான்.

यो गच्छेत् परदारांश्च काममोहप्रपीडितः ।
तस्य पापेन लिप्येयं यद्यहं नागमे पुनः ॥ ३४ ॥

யோ கச்சேத் பரதாராம்ச்ச காமமோஹப்ரபீடித:
தஸ்ய பாபேந லிப்யேயம் யத்யஹம் நாகமே புந: 34

யாவனொருவன் மன்மத பீடிதனாய்க் கொண்டு பரஸ்த்ரீ கமனம் பண்ணுகிறான், அவன் பாபத்தை அடையக் கடவேன், மீளவும் வந்திலேனாகில்—என்கிறான்.

पाकभेदं तु यः कुर्यादात्मनश्चोपभुञ्जतः ।
तस्य पापेन लिप्येयं यद्यहं नागमे पुनः ॥ ३५ ॥

பாகபேதம் து ய: குர்யாதாத்மநச்சோபபுஞ்ஜத:
தஸ்ய பாபேந லிப்யேயம் யத்யஹம் நாகமே புந: 35

யாவனொருவன் புஜிக்குமிடத்தில் தனக்கும் கூட புஜிக்கிறவர்களுக்கும் பாகபேதம் பண்ணி புஜிக்கிறான், அவன் பாபத்தை அடையக் கடவேன் மீளவும் வந்திலேனாகில்—என்கிறான்.

दत्वा वै भूमिदानं तु पुनराच्छिन्दतीह यः ।
तस्य पापेन लिप्येयं यद्यहं नागमे पुनः ॥ ३६ ॥

தத்வா வை பூமிதாநம் து புநராச்சிந்ததீஹ ய:
தஸ்ய பாபேந லிப்யேயம் யத்யஹம் நாகமே புந: 36

யாவனொருவன் ஒரு ப்ராம்மணனுக்கு பூமிதானம் பண்ணித் திரும்பவும் அந்த பூமியை அபஹரிக்கிறான், அவன் பாபத்தை அடையக்கடவேன் மீளவும் வந்திலேனாகில்—என்கிறான்.

स्त्रियं भुक्त्वा रूपवतीं पुनर्यस्तां विनिन्दति ।
तस्य पापेन लिप्येयं यद्यहं नागमे पुनः ॥ ३७ ॥

ஸ்த்ரியம் புக்த்வா ரூபவதீம் புநர் யஸ் தாம் விநிந்ததி
தஸ்ய பாபேந லிப்யேயம் யத்யஹம் நாகமே புந: 37

யாவனொருவன் ரூபவதியான ஸ்த்ரீயை யௌவன காலத்தில் அனுபவித்துப் பின்பு, அவளுக்கு தோஷத்தைச் சொல்லி விட்டுவிடுகிறான், அவன் பாபத்தை அடையக் கடவேன், மீளவும் வந்திலேனாகில்—என்கிறான்.

योऽमावास्यां विशालाक्षि ! श्राद्धं कृत्वा स्त्रियं व्रजेत् ।
तस्य पापेन लिप्येयं यद्यहं नागमे पुनः ॥ ३८ ॥

யோமாவாஸ்யாம் விசாலாக்ஷி ச்ராத்தம் க்ருத்வா ஸ்த்ரியம் வ்ரஜேத்
தஸ்ய பாபேந லிப்யேயம் யத்யஹம் நாகமே புந: 38

யாவனொருவன் அமாவாஸ்யையன்று ச்ராத்தம் பண்ணி ஸ்த்ரீகமனம் பண்ணுகிறான், அவன் பாபத்தை அடையக்கடவேன் மீளவும் வந்திலேனாகில்—என்கிறான்.

भुक्त्वा परस्य चान्नानि यस्तं निन्दति निर्घृणः ।
तस्य पापेन लिप्येयं यद्यहं नागमे पुनः ॥ ३९ ॥

புக்த்வா பரஸ்ய சாந்நாநி யஸ்தம் நிந்ததி நிர்க்ருண:
தஸ்ய பாபேந லிப்யேயம் யத்யஹம் நாகமே புந: 39

யாவனொருவன் பரனுடைய அன்னத்தை நன்ருக புஜித்து, தயையில்லாதவனாய்த் திரும்பவும் அவனை தூஷிக்கிருன், அவன்பாபத்தை அடையக் கடவேன் மீளவும் வந்திலேனாகில்—என்கிருன்.

यस्तु कन्यां ददामीति पुनस्तां न प्रयच्छति ।
तस्य पापेन लिप्येयं यद्यहं नागमे पुनः ॥ ४० ॥

யஸ்து கந்யாம் ததாமீதி புநஸ் தாம் ந ப்ரயச்சதி
தஸ்ய பாபேந லிப்யேயம் யத்யஹம் நாகமே புந: 40

யாவனொருவன் கன்யையைக் கொடுக்கிறேமென்று சொல்லித் திரும்பவும் கொடாமல் போகிருன், அவன்பாபத்தை அடையக்கடவேன் மீளவும் வந்திலேனாகில்—என்கிருன்.

षष्ठ्यष्टम्योरमावास्याचतुर्दश्योश्च नित्यशः ।
अस्नातानां गतिं गच्छे यद्यहं नागमे पुनः ॥ ४१ ॥

ஷஷ்ட்யஷ்டம்யோ ரமாவாஸ்யா சதுர்தச்யோச்ச நித்யச:
அஸ்நாதாநாம் கதிம் கச்சே யத்யஹம் நாகமே புந: 41

யாவனொருவன் ஷஷ்டி அஷ்டமீ அமாவாஸ்யை சதுர்தசி இந்த திதிகளில் ஸ்நானம் பண்ணுதே புஜிக்கிருன், அவன்பாபத்தை அடையக்கடவேன் மீளவும் வந்திலேனாகில்—என்கிருன்.

दास्यामीति प्रतिश्रुत्य न च यस्तत्प्रयच्छति ।
गतिं तस्य प्रपद्ये वै यद्यहं नागमे पुनः ॥ ४२ ॥

தாஸ்யாமீதி ப்ரதிச்ருத்ய நச யஸ் தத் ப்ரயச்சதி
கதிம் தஸ்ய ப்ரபத்யே வை யத்யஹம் நாகமே புந: 42

யாவனொருவன் ஒருவனுக்கு ஒன்றைக் கொடுக்கிறேனென்று சொல்லித் திரும்பவும் அதைக் கொடாமல் போகிறான், அவன் பாபத்தை அடையக் கடவேன் மீளவும் வந்திலேனாகில்—என்கிறான்.

मित्रभार्यां तु यो गच्छेत् कामबाणवशानुगः ।
तस्य पापेन लिप्येयं यद्यहं नागमे पुनः ॥ ४३ ॥

மித்ரபார்யாம் து யோ கச்சேத் காமபாணவசாநுக:
தஸ்ய பாபேந லிப்யேயம் யத்ய ஹம் நாகமே புந: 43

**மிதாத் த்ராயத இதி மித்ரம்—என்று சொல்லுகிறபடியே மஹோபகாரகனை மித்ரனுடைய பார்யையை வசீகரிக்கிறான் யாவனொருவன், அவனுடைய பாபத்தை அனுபவிக்கக் கடவேனாகிறேன் மீளவும் வந்திலேனாகில்—என்கிறான்.*

गुरुपत्नीं राजपत्नीं ये तु गच्छन्ति मोहिताः ।
तेषां गतिं प्रपद्ये वै यद्यहं नागमे पुनः ॥ ४४ ॥

குருபத்நீம் ராஜபத்நீம் யே து கச்சந்தி மோஹிதா:
தேஷாம் கதிம் ப்ரபத்யே வை யத்யஹம் நாகமே புந: 44

யாவர்சில பேர்கள் தங்களுக்கு ஆமுஷ்மிக ப்ரதாதாவான ஆசார்யனுடைய பத்நியையும், ஐஹிகப்ரதாதாவான ராஜாவினுடைய பத்நியையும்

காமத்திலே அநுபவிக்கிறார்களோ, அவர்கள் பாபத்தை அடையக்கடவேன் மீளவும் வந்திலேனாகில் - என்கிறான்.

यो वै दारद्वयं कृत्वा एकस्या प्रीतिमान् भवेत् ।
गतिं तस्य प्रपद्ये वै यद्यहं नागमे पुनः ॥ ४५ ॥

யோ வை தாரத்வயம் க்ருத்வா ஏகஸ்யாம் ப்ரீதிமாந் பவேத்
கதிம் தஸ்ய ப்ரபத்யே வை யத்யஹம் நாகமே புந: 45

யாவனொருவன் இரண்டு ஸ்த்ரீகளை விவாஹம் பண்ணி, ஒரு ஸ்த்ரீயை உபேக்ஷை பண்ணி மற்றொரு ஸ்த்ரீயை ஸந்தோஷத்தோடே அநுபவிக்கிறான், அவன்பாபத்தை அடையக்கடவேன் மீளவும் வந்திலேனாகில்—என்கிறான்.

अनन्यशरणां भार्यां यौवने यः परित्यजेत् ।
तस्य पापेन लिप्येयं यद्यहं नागमे पुनः ॥ ४६ ॥

அநந்யசரணாம் பார்யாம் யௌவநே ய: பரித்யஜேத்
தஸ்ய பாபேந லிப்யேயம் யத்யஹம் நாகமே புந: 46

யாவனொருவன் அநந்யகதியாயும் பதிவ்ரதையாயுமிருக்கிற ஸ்த்ரீயை யௌவனத்திலே த்யஜிக்கிறான், அவன்பாபத்தை அடையக்கடவேன் மீளவும் வந்திலேனாகில் —என்கிறான்.

गोकुलस्य तृषार्तस्य जलार्थमभिधावतः ।
विघ्नमाचरते यस्तु तत्पापं स्यादनागमे ॥ ४७ ॥

கோகுலஸ்ய த்ருஷார்த்தஸ்ய ஜலார்த்த மபிதாவத:
விக்ந மாசரதே யஸ்து தத்பாபம் ஸ்யாதநாகமே 47

யாவனொருவன் பஹுதாஹத்தினாலே மிகவும் பீடிதமாய் ஜலபாநார்த்தம் வேகத்தோடே ஓடி வருகிற பசுக்கூட்டத்துக்கு ஜலபான விக்னம் பண்ணுகிறான், அவன்பாபத்தை அடையக்கட வேன் மீளவும் வந்திலேனாகில்—என்கிறான்.

ब्रह्मघ्ने च सुरापे च चोरे भग्नव्रते तथा ।
या गतिर्विहिता सद्भिस्तत्पापं स्यादनागमे ॥ ४८ ॥

ப்ரஹ்மக்நே ச ஸுராபே ச சோரே பக்நவ்ரதே ததா
யா கதிர்விஹிதா ஸத்பிஸ் தத்பாபம் ஸ்யாதநாகமே 48

யாவனொருவன் ப்ரஹ்மஹத்யை பண்ணுகிறான், யாவனொருவன் மத்யபானம் பண்ணுகிறான், யாவனொருவன் ஸ்வர்ணஸ்தேயம் பண்ணுகிறான், யாவனொருவன் வ்ரதபங்கம் பண்ணுகிறான்—இப்படிப் பட்ட மஹா பதிதர்களுக்குப் பெரியோர்களாலே யாதொருகதி சொல்லப்படுகிறதோ, அப்படிக்கொத்த க்ரூரமான பாபத்தை அடையக் கடவேன் மீளவும் வந்திலேனாகில்—என்கிறான்.

वासुदेवं परित्यज्य येऽन्यं देवमुपासते ।
तेषां गतिं प्रपद्ये वै यद्यहं नागमे पुनः ॥ ४९ ॥

வாஸுதேவம் பரித்யஜ்ய யேந்யம் தேவமுபாஸதே
தேஷாம் கதிம் ப்ரபத்யே வை யத்யஹம் நாகமே புந: 49

யாவர் சிலபேர்கள் ஆச்ரிதவத்ஸலனாய் ஸர்வவ்யாபியான ஸ்ரீ வாஸுதேவனை ஆராதனம் பண்ணாமல் இதர தேவதைகளை உபாஸிக்கிறார்கள், அவர்

களுடைய துர்க்கதியை அடையக்கடவேன், மீளவும் வந்திலேனாகில்—என்கிறான்.

नारायणमथान्यैस्तु देवैस्तुल्यं करोति यः ।
तस्य पापेन लिप्येयं यद्यहं नागमे पुनः ॥ ५० ॥

நாராயணமதாந்யைஸ் து தேவைஸ் துல்யம் கரோதி ய:
தஸ்ய பாபேந லிப்யேயம் யத்யஹம் நாகமே புந: 50

ஸர்வஸ்மாத்பரனாய், ஸர்வாந்தர்யாமியாய், ஸர்வ கர்ம ஸமாராத்யனாய், முமுக்ஷூபாஸ்யனாய், மோக்ஷ ப்ரதனாய், முக்த ப்ராப்யனான ஸர்வேச்வரனையும்—

"காணிலுமுருப்பொலார் செவிக்கினாத கீர்த்தியார்
பேணிலும் வரந்தரும் மிடுக்கிலாத தேவராய்"

கர்மபரவசரான வ்யதிரிக்த தேவதைகளையும் ஸம மாக எண்ணுகிறான் யாவனொருவன், அவனைப் போலே நித்ய ஸம்ஸாரியாகக் கடவேன் மீளவும் வந்திலேனாகிலென்று—இப்படி சபதங்களைப் பண்ணி னன்காணும் நம்பாடுவான்—என்று பூமிப் பிராட்டி யைப் பார்த்து ஸ்ரீவராஹநாயனார் அருளிச்செய்தார்.

चंडालवचनं श्रुत्वा परितुष्टस्तु राक्षसः ।
उवाच मधुरं वाक्यं गच्छ शीघ्रं नमोऽस्तु ते ॥ ५१ ॥

சண்டாலவசநம் ச்ருத்வா பரிதுஷ்டஸ்து ராக்ஷஸ:
உவாச மதுரம் வாக்யம் கச்ச சீக்ரம் நமோஸ்து தே 51

இப்படி ப்ரதிஜ்ஞை பண்ணின நம்பாடுவானைப் பார்த்து ப்ரஹ்மரக்ஷஸ்ஸானது ஸந்துஷ்டமாய் நமஸ்கரித்து, இப்படி ப்ரதிஜ்ஞை பண்ணின நீ

கடுகப்போய் வ்ரதத்தைத் தலைக்கட்டித் திரும்பிவரக் கடவாய் என்று மதுரமாக வார்த்தை சொல்லிற்று.

राक्षसेन विनिर्मुक्तश्चण्डालः कृतनिश्चयः ।
पुनर्गायति मह्यं वै मम भक्त्या व्यवस्थितः ॥ ५२ ॥

ராக்ஷஸேந விநிர்முக்தச்சண்டால: க்ருதநிச்சய:
புநர்காயதி மஹ்யம் வை மம பக்த்யா வ்யவஸ்தித: 52

ராக்ஷஸனாலே விடப்பட்ட நம்பாடுவான் ஸம்ஸாரத்தில் நின்றும் முகதனானவன் வருமாப்போலே வந்து, முன்பு போலே நமக்குப் பாடினான் காணும்—என்கிறார்.

अथ प्रभाते विमले विनिवृत्ते तु जागरे ।
नमो नारायणेत्युक्त्वा श्वपाकः पुनरागमत् ॥ ५३ ॥

அத ப்ரபாதே விமலே விநிவ்ருத்தே து ஜாகரே
நமோ நாராயணேத்யுக்த்வா ச்வபாக: புநராகமத் 53

அநந்தரம் பொழுதுவிடிந்து ஜாகர வ்ரதமும் தலைக்கட்டினவளவிலே, நம்பக்கலிலே ஆத்ம ஸமர்ப்பணம் பண்ணி, தனக்கு த்யாஜ்யமான சரீரம் கழிகையிலுண்டான ஆசையாலே கடுக மீண்டான் காணும் நம்பாடுவான்—என்றருளிச் செய்கிறார்.

गच्छतस्त्वरितं तस्य पुरुषः पुरतः स्थितः ।
उवाच मधुरं वाक्यं श्वपाकं तदनन्तरम् ॥ ५४ ॥

கச்சதஸ் த்வரிதம் தஸ்ய புருஷ: புரத: ஸ்தித:
உவாச மதுரம் வாக்யம் ச்வபாகம் ததநந்தரம் 54

நம்பாடுவான் மீண்டு போகிறவளவில் நம்பக்கல் பாட வந்த கடுமையைக்காட்டில் இரட்டித்தகடுமை யோடே போகப்புக்கான். இப்படிப் போகிறவன் முன்பே ஒரு புருஷனவன் வந்துநின்று, நம்பாடு வானைப் பார்த்து, இனிதாக ஒரு வார்த்தை சொன்னான் காணும்.

कुतो गच्छसि चंडाल द्रुतं गमननिश्चितम् ।
एतदाचक्ष्व तत्त्वेन यत्र ते वर्तते मनः ॥ ५५ ॥

குதோ கச்சஸி சண்டால த்ருதம் கமநநிச்சிதம்
ஏததாசக்ஷ்வ தத்வேந யத்ர தே வர்த்ததே மந: 55

உன் நடையைப் பார்த்தவாறே முன்புபோ லன்றிக்கே அறக் கடுகி யிருந்தது! நீ இப்படி எங் கேறப் போகிறது? இதை எனக்கு உண்மையாகச் சொல்லவேணு மென்றான்—அந்தப் புருஷன்.

तस्य तद्वचनं श्रुत्वा श्वपाकः सत्यसंमतः ।
उवाच मधुरं वाक्यं पुरुषं तदनन्तरम् ॥ ५६ ॥

தஸ்ய தத் வசநம் ச்ருத்வா ச்வபாக: ஸத்யஸம்மத:
உவாச மதுரம் வாக்யம் புருஷம் ததநந்தரம் 56

ஸத்யப்ரதிஜ்ஞனை நம்பாடுவான் அந்தப் புருஷன் வார்த்தையைக்கேட்டு, அவனைப்பார்த்து மதுரமாக ஒரு வார்த்தை சொன்னான் காணும்— என்கிறார்.

समयो मे कृतो यत्र ब्रह्मराक्षससन्निधौ ।
तत्राहं गन्तुमिच्छामि यत्रासौ ब्रह्मराक्षसः ॥ ५७ ॥

ஸமயோ மே க்ருதோ யத்ர ப்ரஹ்மராக்ஷஸஸந்நிதௌ
தத்ராஹம் கந்துமிச்சாமி யத்ராஸௌ ப்ரஹ்மராக்ஷஸ: 57

ப்ரஹ்மரக்ஷஸ்ஸின் முன்பே சபதங்களைப் பண்ணிப் போந்தேன். அந்த ப்ரதிஜ்ஞை தப்பாமல் யாதொரு இடத்திலே ப்ரஹ்மராக்ஷஸன் நின்றான் அங்கேறப் போகிறேன். முன்பு நின்றவிடத்தில் கண்டிலேனாகில், அவன் நின்றவிடந்தேடிப் போகக் கடவேனென்கிறான் நம்பாடுவான்—என்றருளிச் செய்கிறார்.

श्वपाकवचनं श्रुत्वा पुरुषो भावशोधकः ।
उवाच मधुरं वाक्यं श्वपाकं तदनन्तरम् ॥ ५८ ॥

ச்வபாகவசநம் ச்ருத்வா புருஷோ பாவசோதக:
உவாச மதுரம் வாக்யம் ச்வபாகம் ததநந்தரம் 58

இப்படி நம்பாடுவான் சொன்ன வார்த்தையைக் கேட்டு, அந்தப் புருஷன் இவனுடைய மனஸ்ஸை சோதிக்கைக்காக ஒரு மதுரமான வார்த்தை சொன்னான் காணும்—என்கிறார்.

न तत्र गच्छ चंडाल मार्गेणानेन सुव्रत ।
तत्रासौ राक्षसः पापः पिशिताशी दुरासदः ॥ ५९ ॥

ந தத்ர கச்ச சண்டால மார்க்கேணாநேந ஸுவ்ரத
தத்ராஸௌ ராக்ஷஸ: பாப: பிசிதாசீ துராஸத: 59

அங்கே ஜாத்யா ராக்ஷஸனுமாய், அதிலே விபீஷணனைப்போலே தர்மாத்மாவாயிருக்கையன்றிக்கே பாபிஷ்டனுமாய், அதிலே சரீரம் கொண்டு தப்பிப் போகை யன்றிக்கே மாம்ஸ பக்ஷகனுமாய், அவனைக்

கொன்று போக வொண்ணுதபடி பலவானுமா யிருப்பான் ஒருத்தன். அங்கு நீ போகக்கடவை யல்லை காண்—என்று நம்பாடுவானைப் பார்த்து இவன் மனஸ்ஸை சோதிக்க வார்த்தை சொன்னன் காணு மந்தப் புருஷன்.

पुरुषस्य वचः श्रुत्वा श्वपाकः सत्यसंगरः ।
मरणं तत्र निश्चित्य मधुरं वाक्यमब्रवीत् ॥ ६० ॥

புருஷஸ்ய வச: ச்ருத்வா ச்வபாக: ஸத்யஸங்கர:
மரணம் தத்ர நிச்சித்ய மதுரம வாக்ய மப்ரவீத் 60

அந்தப் புருஷன் சொன்ன வார்த்தையைக் கேட்டு ஸத்யவாதியான நம்பாடுவான் ஸத்யத்தை விடுவதைக் காட்டிலும் ப்ராணனை விடுவதே ச்ரேஷ்டமாக நினைத்து, மதுரமாகவொரு வார்த்தை சொன்னன்காணு மென்கிருர்.

नाहमेवं करिष्यामि यन्मां त्वं परिपृच्छसि ।
अहं सत्येऽप्रवृत्तो वै शीलं सत्ये प्रतिष्ठितम् ॥ ६१ ॥

நாஹமேவம் கரிஷ்யாமி யந்மாம் த்வம் பரிப்ருச்சஸி
அஹம் ஸத்யே ப்ரவ்ருத்தோ வை சீலம் ஸத்யே ப்ரதிஷ்டிதம் 61

வாராய் புருஷனே! நான் ஸத்யம் தப்பாதே யிருப்பவன். நான் ஸத்யத்தைத் தப்பினுலும், என் ஸ்வபாவம் ஸத்யத்தைத் தப்பாதுகாண்—என்ருன் காணும் நம்பாடுவான்.

ततः स पद्मपत्राक्षः श्वपाकं प्रत्युवाच ह ।
यद्येवं निश्चयस्तात ! स्वस्तितेऽस्तु गमिष्यतः ॥ ६२ ॥

தத: ஸ பத்மபத்ராக்ஷ: ச்வபாகம் ப்ரத்யுவாச ஹ
யத்யேவம் நிச்சயஸ்தாத ஸ்வஸ்தி தேஸ்து கமிஷ்யத: 62

இப்படிச் சொன்ன நம்பாடுவானைப்பார்த்து அந்தப் புருஷனும்—இவன் ப்ராணனைவிட்டும் ஸத்யத்தை ரக்ஷிக்கக் கடவேனென்று சொன்னபடியாலே ப்ரியப்பட்டு—“ அமலங்களாக விழிக்கும் ”—என்று சொல்லுகிறபடியே நம்பாடுவானைப் பாடவரக் காட்டின ப்ரம்மரக்ஷஸ்ஸினுடைய ஆபத்தும் நம்பாடுவானுடைய ஆபத்தும் போகும்படி பூர்ணகடாக்ஷம் பண்ணி “உனக்கு மங்கள முண்டாகக் கடவது, போகாய்.” என்று அனுப்பினான் காணும். அந்தப் புருஷன் யாரோ என்று ஸந்தேஹியாதே,

மஹாவராஹ: ஸ்புடபத்மலோசந: என்றும்
புருஷ: புஷ்கரேக்ஷண: என்றும்

சொல்லுகிறபடியே இருவருமொருவராகக் கொள்ளீரென்று அருளிச் செய்கிறார்.

ब्रह्मरक्षोन्तिकं प्राप्य सत्येऽसौ कृतनिश्चयः ।
उवाच मधुरं वाक्यं राक्षसं पिशिताशनम् ॥ ६३ ॥

ப்ரஹ்மரக்ஷோந்திகம் ப்ராப்ய ஸத்யேஸௌ க்ருதநிச்சய:
உவாச மதுரம் வாக்யம் ராக்ஷஸம் பிசிதாசநம் 63

அந்தப் புருஷன் விடைகொடுக்க, நம்பாடுவானும் அந்த ப்ரம்ம ரக்ஷஸ்ஸு இருக்கிற இடம் தேடிச்சென்று ரக்ஷஸ்ஸைக் கிட்டி இனிதாக ஒரு வார்த்தை சொன்னான்.

भवता समनुज्ञातो गानं कृत्वा यथेप्सया ।
विष्णवे लोकनाथाय मम पूर्णो मनोरथः ।
एतानि मम चांगानि भक्षयस्व यथेच्छया ॥ ६४½ ॥

பவதா ஸமநுஜ்ஞாதோ காநம் க்ருத்வா யதேப்ஸயா
விஷ்ணவே லோகநாதாய மம பூர்ணோ மநோரத:
ஏதாநி மம சாங்காநி பக்ஷயஸ்வ யதேச்சயா 64½

வாராய் ப்ரம்மரக்ஷஸ்ஸே! நீ அனுஜ்ஞை பண்ணிப்போன நான் ப்ராம்மணனுஜ்ஞைபெற்றுப் போனவனுகையாலே எனக்கு வேண்டியபடி ஸர்வேச்வரனாய் மஹாவிஷ்ணுவான ஸ்ரீ அழகிய நம்பியைப் பாடி உகப்பித்துப் பூர்ணமனோரதனனேன். நீயும் என் சரீரத்தில் ருதிரமாம்ஸாதிகளைக் கொண்டு பூர்ணமனோரதனகா யென்றான் நம்பாடுவான்.

श्वपाकवचनं श्रुत्वा ब्रह्मरक्षो भयानकम् ।
उवाच मधुरं वाक्यं श्वपाकं संशितव्रतम् ॥ ६५½ ॥

ச்வபாகவசநம் ச்ருத்வா ப்ரஹ்மரக்ஷோ பயாநகம்
உவாச மதுரம் வாக்யம் ச்வபாகம் ஸம்சிதவ்ரதம் 65½

அத்யந்தம் பயங்கரமா யிருக்கிற ப்ரம்மரக்ஷஸ்ஸானது நம்பாடுவான் வார்த்தையைக் கேட்டு, நம்பாடுவானைப் பார்த்து மதுரமாக ஒரு வார்த்தை சொல்லிற்று.

त्वमद्य रात्रौ चंडाल विष्णोर्जागरणं प्रति ।
फलं गीतस्य मे देहि जीवितं यदिचेच्छसि ॥ ६६½ ॥

த்வமத்ய ராத்ரௌ சண்டால விஷ்ணோர்ஜாகரணம் ப்ரதி
பலம் கீதஸ்ய மே தேஹி ஜீவிதம் யதிசேச்சஸி 66½

வாராய் மஹாநுபாவனே! ப்ராணனை விடுவதாக வந்த உனக்கு ப்ராணனோடே போகவேண்டியிருக்கில், இன்றிரவு ஸர்வேச்வரனுக்குப் பாடின பாட்டின் பலத்தைத் தந்து உன் ப்ராணனோடே போகா யென்றான் அந்த ராக்ஷஸன்.

ब्रह्मरक्षोवच: श्रुत्वा श्वपाक: पुनरब्रवीत् ॥ ६७½ ॥

ப்ரஹ்மரக்ஷோவச: ச்ருத்வா ச்வபாக: புநரப்ரவீத் 67½

இப்படி ப்ரம்மரக்ஷஸ்ஸின் வார்த்தையைக் கேட்டு நம்பாடுவானும் மற்றொரு வார்த்தை சொன்னான்.

यत् त्वया भाषितं पूर्वं मया सत्यं च यत्कृतम् ।
भक्षयस्व यथेच्छं मां दद्यां गीतफलं न तु ॥ ६८ ॥

யத் த்வயா பாஷிதம் பூர்வம் மயா ஸத்யஞ்ச யத் க்ருதம்
பக்ஷயஸ்வ யதேச்சம் மாம் தத்யாம் கீதபலம் நது 68

நீ முன்பு சொன்னப்போலே நானும் தப்பாமல் செய்ததால் நீயுமப்படியே என்னுடைய சரீரத்தை பக்ஷிக்குமத்தனைபோக்கி, நான் கீதபலத்தைத் தருவதில்லை என்றான் நம்பாடுவான்.

चंडालस्य वच: श्रुत्वा हेतुयुक्तमनन्तरम् ।
उवाच मधुरं वाक्यं चंडालं ब्रह्मराक्षस: ॥ ६९ ॥

சண்டாலஸ்ய வச: ச்ருத்வா ஹேதுயுக்த மநந்தரம்
உவாச மதுரம் வாக்யம் சண்டாலம் ப்ரஹ்மராக்ஷஸ: 69

ராக்ஷஸனானவன் நம்பாடுவான் காரணத்துடன் சொன்ன வார்த்தையைக் கேட்டு மறுபடியும் இனிதாக ஒரு வார்த்தை சொன்னான்.

अथवाऽर्धं तु मे देहि पुण्यं गीतस्य यत् फलम् ।
ततो मोक्ष्यामि कल्याण भक्षादस्माद्विभीषणात् ॥ ७० ॥

அதவார்த்தம் து மே தேஹி புண்யம் கீதஸ்ய யத் பலம்
ததோ மோக்ஷ்யாமி கல்யாண பக்ஷாதஸ்மாத் விபீஷணாத் 70

கீதபலமெல்லாம் தாராவிடினும், கீதபலத்தில் பாதியாகிலும் தந்து, பயங்கரமான பக்ஷணத்தில் நின்றும் தப்பிப்போனாலாகாதோ மஹாநுபாவனே!—என்று சொல்லிற்றுக் காணுமென்கிறார்.

ब्रह्मरक्षोवचः श्रुत्वा श्वपाकः संशितव्रतः ।
वाणीं श्लक्ष्णां समादाय ब्रह्मराक्षसमब्रवीत् ॥ ७१ ॥

ப்ரஹ்மரக்ஷோவச: ச்ருத்வா ச்வபாக: ஸம்சிதவ்ரத:
வாணீம் ச்லக்ஷ்ணாம் ஸமாதாய ப்ரஹ்மராக்ஷஸமப்ரவீத் 71

ப்ரம்மரக்ஷஸ்ஸின் வார்த்தையைக்கேட்டு நம்பாடுவானும் இனிதாக ஒரு வார்த்தை சொன்னான்.

भक्षयामीति संश्रुत्य गीतमन्यत् किमिच्छसि ॥ ७१ ॥

பக்ஷயாமீதி ஸம்ச்ருத்ய கீதமந்யத் கிமிச்சஸி? 71

என்னுடைய சரீரத்தை பக்ஷிக்கக் கடவேனென்று அறுதியிட்ட நீ கீதார்த்த (र्ध) பலத்தைக் கேட்கிறாய்; அதுவும் தருவதில்லை—என்றறுதியிட்டான் நம்பாடுவான்.

श्वपाकस्य वचः श्रुत्वा ब्रह्मरक्षो भयावहम् ।
उवाच मधुरं वाक्यं श्वपाकं संशितव्रतः ॥ ७२ ॥

एकयामस्य मे देहि पुण्यं गीतस्य यत्फलम् ।
ततो यास्यसि कल्याण संगमं पुत्रदारकैः ॥ ७३ ॥

ச்வபாகஸ்ய வச: ச்ருத்வா ப்ரஹ்மரக்ஷோ பயாவஹம்
உவாச மதுரம் வாக்யம் ச்வபாகம் ஸம்சிதவ்ரதம் 72
ஏக யாமஸ்ய மே தேஹி புண்யம் கீதஸ்ய யத் பலம்
ததோ யாஸ்யஸி கல்யாண ஸங்கமம் புத்ரதாரகை: 73

அநந்தரம் க்ரூரக்ருத்யனை ப்ரஹ்மராக்ஷஸனும் நம்பாடுவானைப் பார்த்து ஒரு யாமத்தில் பாடின பாட்டின் பலமாகிலும் தந்து, உன் புத்ரதாராதிகளோடே கூடக்கடவாய்—என்றான்.

श्रुत्वा राक्षसवाक्यानि चंडालो गीतलालसः ।
उवाच मधुरं वाक्यं राक्षसं कृतनिश्चयः ॥ ७४½ ॥

ச்ருத்வா ராக்ஷஸவாக்யாநி சண்டாலோ கீதலாலஸ:
உவாச மதுரம் வாக்யம் ராக்ஷஸம் க்ருதநிச்சய: 74½

இப்படிச் சொன்ன ரக்ஷஸ்ஸின் வார்த்தையைக் கேட்டு த்ருடவ்ரதனாய் தீரனுமிருக்கிற நம்பாடுவானும் ரக்ஷஸ்ஸைப் பார்த்து இனிதாக ஒரு வார்த்தை சொன்னான்.

न यामस्य फलं दद्यां ब्रह्मरक्षस्तवेप्सितम् ।
पिबस्व शोणितं मह्यं यत् त्वया पूर्वभाषितम् ॥ ७५½ ॥

ந யாமஸ்ய பலம் தத்யாம ப்ரஹ்மரக்ஷஸ் தவேப்ஸிதம்
பிபஸ்வ சோணிதம் மஹ்யம் யத் த்வயா பூர்வ பாஷிதம் 75½

வாராய் ரக்ஷஸ்ஸே!' ஒரு யாமத்தில் பாடின பலமும் தருவதில்லை. என்னிடத்தில் பாட்டுக்குப் போலே ராகமுண்டாயிருக்கிற என்னுடைய ரக்தத்தைப் பானம் பண்ணுமத்தனை போக்கி, நான் பாடல் பலம் தருவதில்லை என்றான்—நம்பாடுவான்.

श्वपाकस्य वचः श्रुत्वा राक्षसः पिशिताशनः ।
सत्यवन्तं गुणज्ञं च चण्डालमिदमब्रवीत् ॥ ७६½ ॥

ச்வபாகஸ்ய வச:ச்ருத்வா ராக்ஷஸ: பிசிதாசந:
ஸத்யவந்தம் குணஜ்ஞம் ச சண்டாலமிதமப்ரவீத் 76½

இப்படி நம்பாடுவான் சொன்ன வார்த்தையைக் கேட்டு, இவன் உயிரை மாறிக் கொடுத்தும் ஸத்யம் தப்பாமல் நின்றவனுகையாலும், ப்ராணனிற் காட்டிலும் பாட்டினுடைய வைபவத்தை யறிந்தவனுகையாலும், இவன் ஸர்வத்தினுடைய வைஷம்யத்தையு மறியுமென்றறுதியிட்டு ப்ரம்ம ராக்ஷஸன் நம்பாடுவானைப் பார்த்து ஒரு வார்த்தை சொன்னான்.

एकं गीतस्य मे देहि यत् त्वया विष्णुसंसदि ।
निग्रहात्तारयास्माद्वै तेन गीतफलेन माम् ॥
एवमुक्त्वा तु चंडालं राक्षसश्शरणं गतः ॥ ७८ ॥

ஏகம் கீதஸ்ய மே தேஹி யத் த்வயா விஷ்ணுஸம்ஸதி
நிக்ரஹாத் தாரயாஸ்மாத்வை தேந கீதபலேந மாம்
ஏவமுக்த்வாது சண்டாலம் ராக்ஷஸ: சரணம் கத: 78

வாராய் மஹாநுபாவனே! இன்று நீ விஷ்ணு ஸன்னிதியில் பாடின பாட்டில் ஒரு பாட்டின் பலத்

தையாகிலும் கொடுத்து, என்னை இந்த ராக்ஷஸ ஜன்மத்தில் நின்றும் உத்தரிப்பிக்கவேணுமென்று சொல்லி, ரக்ஷஸ்ஸு நம்பாடுவானை சரணம் புகுந்தது காணுமென்கிறார்.

श्रुत्वा राक्षसवाक्यानि श्वपाकः संशितव्रतः ।
उवाच मधुरं वाक्यं राक्षसं पिशिताशनम् ॥ ७९ ॥

ச்ருத்வா ராக்ஷஸ வாக்யாநி ச்வபாக: ஸம்சிதவ்ரத:
உவாச மதுரம் வாக்யம் ராக்ஷஸம் பிசிதாசநம் 79

இப்படி வெகுவிதமாக ப்ரார்த்தித்துச்சொன்ன ரக்ஷஸ்ஸின் வார்த்தைகளை ஸத்யப்ரதிஜ்ஞனை நம்பாடுவான் கேட்டு, ரக்ஷஸ்ஸைப் பார்த்து மதுரமாக ஒரு வார்த்தை சொன்னான் காணுமென்கிறார்.

किं त्वया दुष्कृतं कर्म कृतपूर्वं तु राक्षस ! ।
कर्मणो यस्य दोषेण राक्षसीं योनिमाश्रितः ॥ ८० ॥

கிம் த்வயா துஷ்க்ருதம் கர்ம க்ருதபூர்வம் து ராக்ஷஸ
கர்மணோ யஸ்ய தோஷேண ராக்ஷஸீம் யோநிமாச்ரித: 80

இப்படி சரணாகதனை ரக்ஷஸ்ஸைப் பார்த்து நீ ராக்ஷஸயோனியில் பிறக்கைக்கு என்ன பாபத்தைப் பண்ணினையென்று கேட்டான் நம்பாடுவான்.

एवमुक्तः श्वपाकेन पूर्ववृत्तमनुस्मरन् ।
राक्षसः शरणं गत्वा श्वपाकमिदमब्रवीत् ॥ ८१ ॥

ஏவமுக்த: ச்வபாகேந பூர்வவ்ருத்தமநுஸ்மரந்
ராக்ஷஸ: சரணம் கத்வா ச்வபாகமிதமப்ரவீத் 81

இந்தப்படிக்கு நம்பாடுவானாலே கேட்கப்பட்டதாய் பூர்வவ்ருத்த ஸ்மரணம் வந்ததான ரக்ஷஸ்ஸானது நம்பாடுவானை சரணாகதி பண்ணி ஒரு வார்த்தை சொல்லிற்று காணுமென்கிறார்.

नाम्ना वै सोमशर्माहं चरको ब्रह्मयोनिजः ।
सूत्रमन्त्रपरिभ्रष्टो यूपकर्मण्यधिष्ठितः ॥ ८२ ॥

நாம்நா வை ஸோமசர்மாஹம் சரகோ ப்ரஹ்மயோநிஜ:
ஸூத்ரமந்த்ரபரிப்ரஷ்டோ யூபகர்மண்யதிஷ்டித: 82

வாராய் மஹாநுபாவனே! பூர்வ ஜன்மத்திலே நான் ஸோமசர்மா என்றொரு ப்ராம்மணனாய் சரக கோத்ரோத்பவனாய்ப் பிறந்து, ஸூத்ரமந்த்ர பரிப்ரஷ்டனாய் யாகம் பண்ணவேணுமென்று உபக்ரமித்தேன்—என்று சொல்லிற்று காணுமென்கிறார்.

ततोऽहं कारये यज्ञं लोभमोहप्रपीडितः ।
यज्ञे प्रवर्तमाने तु शूलदोषस्त्वजायत ॥ ८३ ॥

ததோஹம் காரயே யஜ்ஞம் லோபமோஹ ப்ரபீடித:
யஜ்ஞே ப்ரவர்த்தமானே து சூலதோஷஸ்த்வஜாயத 83

அர்த்தலோப மோஹத்தினாலே யஜ்ஞம் பண்ணினேன். அந்த யஜ்ஞத்திலே மஹத்தான சூல தோஷமுண்டாச்சுதென்று சொல்லிற்று காணுமென்கிறார்.

अथ पंचमरात्रे तु असमाप्ते क्रतावहम् ।
अकृत्वा विपुलं कर्म ततः पंचत्वमागतः ॥ ८४ ॥

அத பஞ்சமராத்ரே து, அஸமாப்தே க்ரதாவஹம்
அக்ருத்வா விமலம் கர்ம தத: பஞ்சத்வ மாகத: 84

யஜ்ஞம் தொடங்கி அஞ்சு நாளான பிற்பாடு யாகஸமாப்தி யாகாமலிருக்கச்செய்தே நான் மரணத்தை யடைந்தேன் என்றது காண் என்கிறார்.

तस्य यज्ञस्य दोषेण मातंग शृणु यन्मम ।
जातोऽस्मि राक्षसस्तत्र ब्राह्मणो ब्रह्मराक्षसः ॥ ८५ ॥

தஸ்ய யஜ்ஞஸ்ய தோஷேண மாதங்க ச்ருணு யந்மம
ஜாதோஸ்மி ராக்ஷஸஸ்தத்ர ப்ராஹ்மணோ ப்ரஹ்மராக்ஷஸ 85

வாராய் மஹாநுபாவனே! கேள். அந்த யாக தோஷத்திலே நான் ப்ரம்மரக்ஷஸ்ஸாக வந்து பிறந்தேன்—என்றான் காணுமென்கிறார்.

एवं तु यज्ञदोषेण वपुः प्राप्तमिदं मम ।
इत्युक्त्वा तु तदा रक्षः श्वपाकं शरणं गतम् ॥ ८६ ॥

எவம்து யஜ்ஞதோஷேண வபு: ப்ராப்தமிதம் மயா
இத்யுக்த்வா து ததா ரக்ஷ: ச்வபாகம் சரணம் கதம் 86

இந்தப்படி யஜ்ஞதோஷத்திலே இப்படிப் பட்ட ரக்ஷச்சரீரத்தை அடைந்தேனென்று சொல்லி நம்பாடுவானை சரண மடைந்தது காணு மென்கிறார்.

ब्रह्मरक्षोवचः श्रुत्वा श्वपाकः संशितव्रतः ।
बाढमित्यब्रवीद्वाक्यं ब्रह्मराक्षसचोदितः ॥ ८७ ॥

ப்ரஹ்மரக்ஷோவச: ச்ருத்வா ச்வபாக: ஸம்சிதவ்ரத:
பாடமித்யப்ரவீத் வாக்யம் ப்ரஹ்மராக்ஷஸசோதித: 87

நாம் விபீஷணனுக்கு முன்பு அபயப்ரதானம் பண்ணினப்போலே நம்பாடுவானும் சரணாகதமான ரக்ஷஸ்ஸுக்கு பாட(வாத)மென்று அபயப்ரதானம் பண்ணினன் காணுமென்கிறார்.

यन्मया पश्चिमं गीतं स्वरं कैशिकमुत्तमम् ।
फलेन तस्य भद्रं ते मोक्षयिष्यामि किल्बिषात् ॥ ८८ ॥

யந்மயா பச்சிமம் கீதம் ஸ்வரம் கைசிக முத்தமம்
பலேந தஸ்ய பத்ரம் தே மோக்ஷயிஷ்யாமி கில்பிஷாத் 88

இன்று ராத்ரி கைசிகமென்றொரு பண் பாடினேன். அந்த கீதபலத்தினால் இந்த ராக்ஷஸ ஜன்மத்தினின்றும் விடுபட்டு மோக்ஷத்தை யடையக் கடவாய் என்று அபயப்ரதானம் பண்ணினன் காணும் நம்பாடுவான்.

ஸ்ரீவராஹ உவாச—

यस्तु गायति भक्त्या वै कैशिकं मम संसदि ।
स तारयति दुर्गाणि श्वपाको राक्षसं यथा ॥ ८९ ॥

யஸ்து காயதி பக்த்யா வை கைசிகம் மம ஸம்ஸதி
ஸ தாரயதி துர்காணி ச்வபாகோ ராக்ஷஸம் யதா 89

யாவனொருவன் பக்தியோடேகூட நம்முடைய ஸன்னிதியில் வந்து கைசிகமென்கிற பண்ணைப் பாடு

கிருன், அவன் ப்ரம்ம ரக்ஷஸ்ஸை உத்தரிப்பித்த நம்பாடுவானைப்போலே தன்னை யாச்ரயித்தவர்களை உத்தரிப்பிப்பன்—என்று ஸ்ரீ வராஹநாயனார் பூமிப்பிராட்டியைப் பார்த்து அருளிச் செய்தார்.

एवं तत्र वरं गृह्य राक्षसो ब्रह्म संस्थितः ।
जातस्तु विमले वंशे मम लोकं च गच्छति ॥ ९० ॥

ஏவம் தத்ர வரம் க்ருஹ்ய ராக்ஷஸோ ப்ரஹ்மஸம்ஸ்திதः
ஜாதஸ்து விமலே வம்சே மம லோகஞ்ச கச்சதி 90

இப்படி நம்பாடுவான் பக்கலிலே வரம்பெற்ற அந்த ரக்ஷஸ்ஸும் அந்த சரீரத்தைவிட்டு நல்ல வம்சத்திலே நம்முடைய பக்தனாய்ப் பிறந்து, நமக்குப் பல்லாண்டு பாடி நம் பெரியவீடு பெற்றான் காணுமென்று நாச்சியாரைப்பார்த்து அருளிச்செய்தார்.

श्वपाकश्चापि सुश्रोणि मम चैवोपगायकः ।
कृत्वा तु विमलं कर्म स ब्रह्मत्वमुपागतः ॥ ९१ ॥

ச்வபாகச்சாபி ஸுச்ரோணி மம சைவோபகாயகः
க்ருத்வாது விமலம் கர்ம ஸ ப்ரஹ்மத்வமுபாகதः 91

பின்பு நம்பாடுவானும் நெடுங்காலம் நம்முடைய வைபவத்தைப் பாடி நம் பெரியவீடு பெற்றான் காணுமென்று அருளிச்செய்தார்.

एतद्गीतफलं देवि कौमुद्द्वादशीं पुनः ।
यस्तु गायति स श्रीमान् मम लोकं च गच्छति ॥ ९२ ॥

ஏதத் கீதபலம் தேவி கௌமுதத்வாதசீம் புநः
யஸ்து காயதி ஸ ஸ்ரீமாந் மம லோகஞ்ச கச்சதி 92

நமக்குப் பாடுவான் பெறும் பேறு சொல்லுகிறோம்; யாவனொருவன் கார்த்திகை மாஸத்து சுக்ல பக்ஷ த்வாதசி யன்றையதினம் நம்முடைய ஸன்னிதி முன்பே வந்து இந்த கைசிக மாஹாத்மியத்தை வாசிக்கிறான், யாவனொருவன் கேட்கிறான்—அவர்களும் "சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே" என்றும் "ஏதத் ஸாமகாயந் நாஸ்தே" என்றும் சொல்லுகிறபடியே நமக்குப் பல்லாண்டு பாடிக் கொண்டு ஆத்மானுபவம் பண்ணிக்கொண்டிருப்பர்கள் காணும்—என்று நாச்சியாரைப் பார்த்துப் பெருமாள் அருளிச்செய்தார். இப்படி யருளிச் செய்த வார்த்தையைக் கேட்டு, நாச்சியாரும் ப்ரளயார்ணவத்திலுண்டான இளைப்பெல்லாம் தீர்ந்து இக்கானரூபமா யிருப்பதொரு உபாய வைபவமிருந்தபடியென்—என்று க்ருதார்த்தை யானாள்.

இதி ஸ்ரீவராஹபுராணே பூமிவராஹஸம்வாதே

கைசிக மாஹாத்ம்யம் நாம அஷ்டசத்வாரிம்சோத்யாய:

பட்டர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீபராசரபட்டரருளிச்செய்த

கைசிகபுராண வியாக்கியானம்

முற்றிற்று.

விளம்பரம்

ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய க்ரந்தங்கள்

ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்திற்கு மிகவும் அவசியமான நூல்கள் யாவும் காஞ்சீபுரம் கிரந்தமாலா ஆபீஸ் மூலமாகப் பல வருஷங்களாய் வெளியிடப்பட்டு வருகின்றன. ஸம்ஸ்க்ருதம், தமிழ், தெலுங்கு, ஹிந்தி, ஆகிய இப்பாஷைகளில் பல நூற்றுக்கணக்கான நூல்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. வெளிவந்து கொண்டுமிருக்கின்றன. ஷை க்ரந்தமாலா ஆபீஸ் சின்ன காஞ்சீபுரம் தென்னண்டை மாடவீதி 29, நெ. இல்லத்தில் ஸ்தாபனம் செய்யப்பட்டிருக்கின்றது. கிடைக்கக்கூடிய புத்தகங்களின் விரிவான ஜாபிதா வரவழைத்துப் பார்க்க. 10 ரூபாய்க்கு மேற்பட்ட விலையுள்ள புத்தகங்கள் வரவழைக்க விரும்புமவர்கள் முன்னடி அட்வான்ஸ் தொகை யனுப்பியே ஆர்டர் கொடுக்கவேண்டும். அதிக விலையுள்ள புத்தகங்களை ரைல்வே பார்சல் மூலமாக வரவழைத்துக்கொள்ளவேண்டும். அதற்கு அட்வான்ஸ் தொகை யனுப்புவதுடன் ரைல் ஸ்டேஷனும் தெரிவிக்கவேண்டும். ஏககாலத்தில் 50 ரூ. விலையுள்ள புத்தகங்கள் வாங்குமவர்கள் அதிகப்படியாக 10 ரூ. விலையுள்ள புத்தகங்களை இனாமாகப் பெறலாம். ஏககாலத்தில் 100 ரூ. விலையுள்ள புத்தகங்கள் வாங்குமவர்கள் அதிகப்படியாக 25 ரூ. விலையுள்ள புத்தகங்கள் பெறலாம். இதுதான் கமிஷன் முறை. பூர்வாசார்ய க்ரந்தங்களெல்லாம் இங்கே கிடைக்கும். நாலாயிரவுரை ஸகலஸ்தோத்ர பாடவுரை, ரஹஸ்யவுரை யாவும் இங்கே கிடைக்கும்.

இப்படிக்கு,

மானேஜர், க்ரந்தமாலா ஆபீஸ்,

காஞ்சீபுரம்.

வே. சாமிநாதையர் நூல்